தமிழர் நினைவேந்தல் அகவம் – சுவிஸ்
Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil / www.trfswiss.com / trfswiss@gmail.com

# தமிழீழத் தேசிய மாவீரர் நினைவுப் பேச்சுப்போட்டி 2024

**5 வயதுப்பிரிவு**
(01.01.2019 – 31.12.2019 வரையில் பிறந்தோர்)

## தமிழ் என் உயிர்

தமிழ் என் தாய்மொழி. அது என்னைத் தலைநிமிரச் செய்கிறது. எப்போதும் என்னோடு ஒட்டி உறவாடுகிறது. நற்பண்புகளை எனக்கு ஊட்டுகிறது. இனப்பற்றை என்னுள் விதைக்கிறது. எம் மொழிக்காக உயிர்க்கொடை தந்த மாவீரர் தியாகத்தை அறிய வைக்கிறது.

தமிழ் என் உயிர் என்பதை உணர்கிறேன். தமிழை நான் விரும்பிக் கற்கிறேன். உறவுகளோடு தமிழில் கதைக்கிறேன். தமிழர் பண்பாட்டை மதிக்கிறேன். தலைவர் மாமா போன்று நானும் என் தாய்மொழியையும் தாய்நாட்டையும் உயிராக மதிக்கிறேன். நான் தமிழ் வாழ வழி செய்வேன்.

நன்றி,
வணக்கம்.